1984 மார்ச் 23]

கிறது என்கிற கருத்தை அங்கே இருக்கிற சிறப்பு மருத்துவ அதிகாரிகள் சொன்னார்கள். ஆகவேதான ஸ்பெஷலிஸ்ட்ஸ் பரிந்துரை அடிப்படையிலே நாங்கள் அந்தக் கருத்தை ஏறறுக் கொண்டோம். 1973-லேயிருந்து 1978 ஆம் ஆண்டு வரையில் ஸ்டான்லி மருத்துவமனையில் வைத்திருந்தோம். இப்பொழுது அது சென்னை பொது மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டிருக் கிறது.

திருவிடை மருதூர் தாலுகா தலைமை மருத்துவமனையில் சித்த வைத்தியப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம்.

*(421—*வினா எண். 18385)* **திரு. செ. இராமலிங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தாலுகா தலைமை மருத்துவமனை யில் சித்தவைத்தியப் பிரிவு ஏற்படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ): தற்போதில்லை.

புதிய டாக்டர்களை நியமிக்கும்போது ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரிய வைக்கும் திட்டம்.

422—(*வினா எண் 19148)—**திரு. பி. எம். தங்கவேல் ராஜ் :** மாண்புமிகு மக்கள் நல்வாழவுத் துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிதாக டாக்டர்களை நியமிக்கும்போது அவர்களை ஆரம்ப சுகாதார நிலையங்களில் குறைந்தபட்சம் 3 ஆண்டு களாவது பணிபுரிய வேண்டுமென்று ஆணை பிறப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) தற்போது 3 ஆண்டுகளுக்கு மேல் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் டாக்டர்கள் அரசு மருத்துவமனை களுக்கு மாற்றப்படுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) புதியதாக மருத்துவர்களை நியமிக்கும்பொழுது, பட்ட மேற்படிப்பு தகுதி பெறாத மருத்துவர்களை கண்டிப்பாக 2 வருடங்கள் கிராமப் புறங்களில், குறிப்பாக ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணி புரிய வேண்டும் என்ற அரசு உத்தரவு தற்போது உள்ளது.

(ஆ) தற்போது ஆரம்ப சுகாதார நிலையங்களில் 5 முதல் 8 ஆண்டுகளுக்கு மேலாகப்பணிபுரிநது வரும் மருத்துவர்களை அரசு மருத்துவமனைகளுக்கு மாற்றும் சாத்யக் கூற்றினை ஆராயு மாறு இயக்குநர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.